# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 500/2018**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமலை | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : முனுசாமி | சமயம் | : |
| கிராமம் | : கலர்பாளையம் | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 49 |

சாட்சியையும் எதிரியும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியதாஸ் Gr.1 - 2692 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் கலர்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது சித்தப்பா மகன்.

2. கடந்த 14.09.2017 ந்தேதி இரவு 9.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி என் வீட்டிற்கு வந்து பிளேடால் முகத்தில் தாடை கீழ்பகுதியில் கிழித்துவிட்டார். என் வீட்டிற்கு பக்கத்து வீடு தான் எதிரியின் வீடும் உள்ளது. அப்போது இருவரும் சண்டை போட்டு கொண்டோம். காயம்பட்ட நான் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். எனக்கு அரசு மருத்துவமனையில் எனக்கு 3 தையல் போட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் விசாரித்தனர்.

**( 1. 18.09.2017 தேதியிட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்குவிசாரணை:**

ஆஜர் எதிரி சொந்த சித்தப்பா மகன் என்றால் சரிதான். நிலம் சம்மந்தமான வழக்கு செஞ்சி சிவில் நீதிமன்றத்தில் எங்களுக்கிடையில் உள்ளது என்றால் சரிதான். சண்டைக்கு முன்பாக நிலத்தில் இருந்து வீட்டிற்கு வந்தேனா என்றால்

இல்லை. அன்றைய தினம் என்ன பிரச்சனை என்றால் சொத்து எனது பாட்டனுக்கு சொந்தமான சொத்து எனக்கு தான் உரிமை என்று எதிரி பிரச்சனை செய்து அடித்தார். சம்பவ தினம் அன்று சொத்தில் சீர் செய்தேனா என்றால் இல்லை. சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் எனது அனுபவத்தில் உள்ளது. பிரச்சனைக்குரிய இடத்தில் நான் ஏன் செல்கிறேன் என்று எதிரி கேட்டார் அதற்கு நான் தடியால் அடித்து காயப்படுத்தினேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் காயம்பட்ட எதிரி செஞ்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார் என்றால் சரிதான். அவரை தாக்கி விட்டு தப்பித்து கொள்வதற்காக பொய்யாக திருவண்ணாமலை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. சம்பவ தினம் அன்று வீட்டிற்குள் இருந்தேனா என்றால் இல்லை. வீட்டிற்கு வெளியே திண்ணையில் அமர்ந்து கொண்டு இருந்தேன். எனது வீடு மெத்தை வீடு என்றால் சரிதான். மெத்தை வீட்டை ஒட்டி திண்ணையில் சண்டை நடந்ததா என்றால் ஆமாம். இரவில் தான் சண்டை நடந்தது என்றால் சரிதான். சண்டை நடந்த போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 4, 5 நபர் இருந்தார்கள். யார் யார் என்றால் ஏழுமலை, துரை, வினாயகம் மற்றும் 2 பேர் இருந்தார்கள். திருவண்ணாமலை மருத்துவமனைக்கு எப்படி சென்றேன் என்றால் பஸ்ஸில் சென்றேன். நான் மட்டும் தான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் என் மாமா உடன் வந்தார். எந்த இடத்தில் பஸ் ஏறினேன் என்றால் கோட்டம்பூண்டி பேருந்து நிறுத்தத்தில் ஏறினேன். கோட்டம்பூண்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளதா என்றால் உள்ளது. காயம் பட்ட வுடன் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துகொண்டேனா என்றால் இல்லை. பிளேடால் கிழித்துவிட்டதாக கூறிய நிலையில் அந்த பிளேடை போலிசாரிடம் அல்லது மருத்துவரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. போலிசார் விசாரித்தாரா என்றால் விசாரித்தார்கள். புகார் எப்போது கொடுத்தேன் என்றால் 4 நாள் கழித்து அவலூர்பேட்டை போலிசார் வாங்கினார்கள். காவல் நிலையத்தில் நேரடியாக எழுத்து மூலமாக கொடுத்தேனா என்றால் ஆமாம். எந்த தேதியில் போலிசார் விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. எதிரி யின் தாத்தாவுக்கு சொந்தமான சொத்தில் எதிரிக்கு உரிமை உள்ள நிலையில் அதை கேட்டதற்கு அவரை தாக்கிவிட்டு அந்த வழக்கில் இருந்து தப்பித்து கொள்வதற்காக பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மது அருந்துவேன் என்றால் எப்போதாவது